தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

துன்முகி, ஆடி 20, திருவள்ளுவர் ஆண்டு—2047

2016 ஆகஸ்ட் 4, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு."

ஊற்று நீர், மழை நீர் ஆகிய இருவகை நீர் வளமும், மலை வளமும், அதிலிருந்து அருவியாகக் கொட்டி ஆறாகப் பெருகி வரும் ஆற்று நீர் வளமும், வலிமைமிக்க கோட்டையும் ஒரு நாட்டின் உறுப்புக்கள் ஆகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 21, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வெ.ப.பா. பரமசிவம், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

21—

வன வளங்களைப் பாதுகாத்தல்

***692—டாக்டர் வெ.ப.பா. பரமசிவம்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வன வளங்கள் மற்றும் வன உயிரினம் ஆகியவற்றின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மையை உறுதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செயல்களின் புயல் வடிவாய், செயற்கரிய செய்து முடிக்கும் வல்லமை பொருந்திய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தின் வன வளங்கள் மற்றும் வன உயிரினங்களின் பாதுகாப்பினை உறுதி செய்ய பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால், தமிழ்நாட்டின் பசுமைப் போர்வையை (Green cover) அதிகரித்து, சுற்றுச்சூழல் சமநிலையை உறுதி செய்யும்பொருட்டு, மாபெரும் நடவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, 2011–2012 ஆம் ஆண்டு முதல் புரட்சிகரத் திட்டமாக வனத் துறைமூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் பல்வேறு திட்டங்களின்கீழ், சுமார் 9 கோடி மரக் கன்றுகள் நடப்பட்டுள்ளன. இந்தியாவிலேயே தமிழகம்தான் பசுமைப் போர்வையை மேம்படுத்துவதில் முதன்மையான மாநிலமாக விளங்குகிறது என இந்திய வன நில அளவை நிறுவன அறிக்கை 2015–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியில், வன வளங்களைப் பாதுகாக்கவும், பராமரிக்கவும் 13 வனப் பாதுகாப்புப் படைகள், 5 பறக்கும் படைகள், 17 வன நிலையங்கள், 112 வன சோதனைச் சாவடிகள், 11 சுழல் தணிக்கைச் சாவடிகள் ஏற்படுத்தப்பட்டு, சிறப்பாக நிருவகிக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வெ.ப.பா. பரமசிவம் அவர்கள்.

டாக்டர் வெ.ப.பா. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் பணிவான வணக்கத்தினை முதலிலே உங்களுக்குச் சமர்ப்பித்துக் கொள்கிறேன். ஒப்பற்ற நல்லாட்சி, ஊழலற்ற இறைமாட்சி, தப்பற்ற திட்டங்கள், சம நீதிச் சட்டங்கள், எப்பொழுதும் ஏழையர்க்கும், எளியவர்க்கும் நல்வாழ்வு என மக்கள் திலகத்தின் மனசாட்சியாக, (மேசையைத் தட்டும் ஒலி) மகத்தான மக்களாட்சியினைத் தந்து கொண்டிருக்கின்ற கழகத்தின்

2016 ஆகஸ்ட் 4]

நிரந்தர பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து முதலில் வணங்குகிறேன். 32 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழக அரசியல் வரலாற்றை மாற்றி எழுதியவரும், 50 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு கட்சி தனித்துப் போட்டியிட்டு, ஆட்சியைக் கைப்பற்றியது (மேசையைத் தட்டும் ஒலி) என்ற பெருமைக்குச் சொந்தக்காரருமான மாண்புமிகு அம்மா அவர்கள் வீற்றிருக்கின்ற இந்த மாபெரும் சபையில், எளிய தொண்டனாக கழகப் பணியும், மருத்துவப் பணியும் ஆற்றி வந்த 36 வயது நிரம்பிய இளைஞனான என்னை, மனிதநேயத்தோடு, மக்கள் பணியாற்ற மகத்தான வாய்ப்பினை வழங்கி, இந்த மாமன்றத்தில் நின்று பேசுவதற்கு வாய்ப்பளித்து, அரசியலில் என் போன்றோருக்கு நிழல் தருகின்ற ஆலமரமாய்த் திகழ்ந்து, எங்களை ஆளாக்கி அழகு பார்க்கின்ற அன்னையே, வருகின்ற தலைமுறைக்கும் வாழ்வு தர பாடுபடும் வரலாறே, தமிழர்கள் நலம் நாடி நாளெல்லாம் உழைக்கின்ற தமிழ்த் தாயே, உங்கள் பாதம் பணிந்து என் நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன் அம்மா.

வேடசந்தூர் தொகுதியில் வெற்றி பெறும் வேட்பாளர் சார்ந்த கட்சிதான் ஆட்சி அமைக்கும் என்ற கடந்த 50 ஆண்டுகால அரசியல் வரலாற்றை (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் இங்கே பிழைபடாமல் எழுதி என்னை இந்த மாமன்றத்திற்கு அனுப்பி வைத்த எனது உயிரினும் மேலான தொகுதி மக்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அனைவரையும் அரவணைத்து அன்பு காட்டுவது ஒரு கலை; அன்னையே, உங்களுக்கு அதுவே ஒரு கொடை; அன்பின் அவதாரமாய், அக்கறையின் அச்சாரமாய், பண்பின் சிகரமாய், பாசத்தின் புனிதமாய், உற்சாகத்தின் உயரமாய், நம்பிக்கையின் அரசியாய்த் திகழும் அம்மா, தங்கத்தை விலையில்லாமல் தந்ததால் தங்கத் தாரகை ஆனீர்கள்; ஆலயங்கள்தோறும் அன்னதானமும், (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா உணவகங்கள்மூலம் அறுசுவை உணவும் தந்ததால் அன்னபூரணி ஆனீர்கள்; கணினி தந்து மாணாக்கர்கள் கல்விக் கண் திறந்ததால் கலைமகள் ஆனீர்கள்; காவேரி மீட்டதால் தமிழக மக்களின் காவியத் தலைவி ஆனீர்கள். (குறுக்கீடு)

முற்பகல் 10—05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. செங்குட்டுவன், கொஞ்சம் உட்காருங்கள். முதன் முதலாகப் பேசுகிறார். அதனால் நன்றி சொல்லிப் பேசுகிறார். அதில் என்ன சொல்கிறீர்கள்? கொஞ்சம் பேசாமல் இருங்கள். டாக்டர் பரமசிவம், சீக்கிரம் கேள்வியைக் கேளுங்கள்.*

டாக்டர் வெ.ப.பா. பரமசிவம்: *காவேரி மீட்டதால் தமிழக மக்களின் காவியத் தலைவி ஆனீர்கள். எளிய தொண்டனுக்கும் ஏற்றம் தருவதால் வாழும் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். ஆனீர்கள் அம்மா. அன்னையின் அன்பையும், தந்தையின் கண்டிப்பையும் ஒருங்கிணைந்து காட்டி, ஒன்றரைக் கோடி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்களையும் இராணுவ கட்டுக்கோப்போடு, (மேசையைத் தட்டும் ஒலி) ஒழுக்கத்தோடு இந்த அவையிலே வழிநடத்தி, புன்னகை மன்னன் பூவிழி கண்ணன் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் கண்ட இந்தப் பேரியக்கத்தை தங்கள் உழைப்பால், தியாகத்தால் இந்தியாவின் மூன்றாவது மிகப் பெரிய கட்சியாக உயர்த்திப் பிடித்திருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்ற திசைநோக்கி வணங்குகிறேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. செங்குட்டுவன், நீங்கள் உட்காருங்கள். நீங்களெல்லாம் முதலில் எழுந்து பேசும்போது உங்கள் தலைவர்களைப் பாராட்டி வாழ்த்திப் பேசுகின்றீர்கள். அதேமாதிரிதான் அவரும் பேசுகின்றார். அதில் ஒன்றும் தவறு இல்லை. முதல்முறையாக பேசுகிறார். நன்றி சொல்கிறார். நீங்கள் உட்காருங்கள்.*

டாக்டர் வெ.ப.பா. பரமசிவம்: *கேள்விக்குச் செல்கிறேன். வனம் இன்றி போனால் உயிர் இன்றி போகும் என்பது கூற்று. இதையறிந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பகட்டாகப் பிறந்த நாள் கொண்டாடும் பல அரசியல் தலைவர்கள் மத்தியிலே, பிறந்த நாளில் பல கோடி மரங்களை நட்டு, வருங்கால தலைமுறையினருக்கு வளமான (மேசையைத் தட்டும் ஒலி) இயற்கைச் சூழ்நிலையை மீட்டுக் கொடுத்திருக்கிறார்கள். வானுக்கும் மழை பெய்ய வாய்ப்பளித்த வள்ளலாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்தியாவில்*

தமிழ்நாட்டை பசுமைப் போர்வை அதிகரிப்பில் முதன்மை மாநிலமாக மாற்றியிருக்கிறார்கள் என்ற தகவலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிந்து அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது வேடசந்தூர் தொகுதியில் அய்யலூர் வனச் சரகம், பஞ்சந்தாங்கி ஒதுக்குக் காடுகளுக்கு உட்பட்ட நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் நிலத்தடி நீரை அதிகரிக்க ஏதுவாக, ஓடைகளின் குறுக்கே தடுப்பணைகள் மற்றும் கசிவுநீர்க் குட்டைகள் வனத் துறையின் மூலமாக அமைத்துத் தரப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணுக்கு மழை நீர் வாழ்த்து. மக்கள் மனம் குளிர்வித்த மார்க்கதரிசி, எங்கள் தீர்க்கதரிசி (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழிகாட்டுதல்படி செயல்படும் அரசு, 2016 ஆம் ஆண்டு வரை திண்டுக்கல் மண்டலத்தின் கட்டுப்பாட்டில் அமைந்துள்ள வனப் பகுதிகளில், நீர் வளத்தினை மேம்படுத்தும் நோக்கோடு ரூபாய் 223 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 217 தடுப்பணைகளையும். . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. செங்குட்டுவன், நீங்கள் பழைய உறுப்பினர். கொஞ்சம் உட்காருங்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *ரூபாய் 253.6 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 147 கசிவுநீர்க் குட்டைகளையும் அமைத்து, மொத்தம் 476.6 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, திண்டுக்கல் மண்டலத்தில் வன வளம் சிறக்க வழிவகை செய்துள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போது கோரியுள்ள வேடசந்தூர் தொகுதி, அய்யலூர் வனப் பகுதிக்கு உட்பட்ட நீர்ப்பிடிப்புப் பகுதிகளான

காங்கேயன்பட்டி, பஞ்சந்தாங்கி கிராமங்களில் அமைந்துள்ள கருப்பசாமி ஓடையின் குறுக்கே தடுப்பணைகள் மற்றும் கசிவுநீர்க் குட்டைகள் அமைத்துத் தர மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அனுமதியோடு ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வெ.ப.பா. பரமசிவம் அவர்கள்.*

டாக்டர் வெ.ப.பா. பரமசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய வாழ்விலே விளக்கேற்றுகின்ற வகையிலே, நிலத்தடி நீரை அதிகரிக்கின்ற விதமாக, நாங்கள் கோரியிருக்கின்ற தடுப்பணைகளைக் கட்டித்தர ஆவன செய்வேன் என்று உறுதியளித்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் அவர்கள்.*

திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். நமக்கு நாமே நாயகன் தளபதி அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் அரசியல் வழிகாட்டி, துணைப் பொதுச் செயலாளர் அண்ணன் ஐ. பெரியசாமி அவர்களுக்கும், இந்த சட்டமன்றத்திலே 30 ஆண்டுகாலம் பணியாற்றிய, எனது தந்தை ஆண்டி அம்பலம் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நத்தம் தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும், தோழமைக் கட்சி நண்பர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

நத்தம் தொகுதி, லிங்காவாடி ஊராட்சி, லிங்காவாடி மலையூர் கிராமம், சேத்தூர் கிராமம் மற்றும் சின்னமலையூர்வலசு, புதுப்பட்டி ஊராட்சி, பெரியமலையூர் கிராமங்களுக்கும் வனத் துறையின் சார்பில் சாலை அமைக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2016 ஆகஸ்ட் 4]

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆண்டி அம்பலம் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிதி நிலைக்கேற்ப ஆராய்ந்து ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத்தில் இருக்கக்கூடிய மிருகங்களால் விவசாயம் கடுமையாகப் பாதிக்கப்படுகிறது. அதேபோல மனித உயிர்களும் மிருகங்களால் வதைக்கப்படுகின்றன. இந்த நிலை முழுமையாக அரசுக்குத் தெரியுமா? இதற்குக் காரணம் வன விலங்குகளினுடைய எண்ணிக்கை அதிகரிப்பு என்று சொல்லப்படுகிறது. அந்த அளவிற்கு வனத்தினுடைய பரப்பை அதிகப்படுத்துவதற்கு வழி இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி அவர்களுடைய கோரிக்கைக்கு நான் ஏற்கெனவே மானியக் கோரிக்கையில் பதில் சொல்லியிருக்கிறேன். இருந்தாலும், இப்போது அந்த வன உயிரினங்கள் மக்களைத் தாக்காத அளவிற்கு, விலங்குகள் வாழ்கின்ற பகுதியிலே அவற்றுக்கு வேண்டிய தீவனங்கள் கிடைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அனைத்துப் பணிகளையும் செய்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) யானைகள் மற்றும் மற்ற விலங்குகள் புகாத அளவிற்கு அகழிகள் மற்றும் மின் வேலிகள் அமைக்கப்பட்டு, தடுக்கப்பட்டிருக்கிறது. தேவையான ஆதாரங்களைப் பெற்று, அத்தனைப் பணிகளும் செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: அதாவது அரசு மூலமாக உயர் அதிகாரிகளிடம் சொல்லி, அதற்குரிய வேலைகள் செய்ய ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

22—

பகுதி நேர நியாய விலைக் கடை

***76—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளச்சல் தொகுதி, கல்லுவிளையில் வெள்ளிகோடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் மூலமாகப் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டத்திலுள்ள வெள்ளிகோடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தால் நடத்தப்பட்டு வரும் முளகுமூடு நியாய விலைக் கடையிலிருந்து கல்லுவிளை பகுதியிலுள்ள 100 குடும்ப அட்டைகள் மற்றும் கூவிமாவிளை பகுதியிலுள்ள 98 குடும்ப அட்டைகளைப் பிரித்து, 198 குடும்ப அட்டைகளுடன் கல்லுவிளையில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) 12–7–2016 முதல் செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.